

இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி தங்கச்சிமடம் ஊராட்சியில் நடைபெற்ற புதிய சமுதாய கூடம் மற்றும் புதிய நியாய விலை கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்றனர்.



தேனி – பொட்டிபுரத்தில் கம்மாய் நீர் வந்தடைந்ததை வரவேற்கும் விதமாக சின்னமனூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் கண்ணியம்பட்டி சி.முருகேசன் தலைமையில் மலர்கள் தூவி வரவேற்றனர். இதில் சிவகுமார் எம்.மகேந்திரன், பி.பழனிவேல், ராஜன், ஜி.சுருளி, எஸ். சிங்கராஜ், சரவணன், முத்து விஜயன், விவேகானந்தன், நாகராஜ், இளங்கோவன், ஜெயக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு யாசித்து எதையும் கேட்கவில்லை! உரிமையைத்தான் கேட்கிறது!

# மெட்ரோ ரயில் திட்டங்களை தொடர்ந்து புறக்கணிப்பது ஏன்?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, டிச.22-

**“தமிழ்நாடு யாசித்து எதையும் கேட்கவில்லை, உரிமையைத்தான் கேட்கிறது. மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களை ஒன்றிய அரசு புறக்கணிப்பது ஏன்?” என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பினார்.**

மாநிலங்களவையில் கழக உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் பேசியதாவது:-

2025-26 ஆம் நிதியாண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள் தொடர்பான விவாதத்தில் பங்கேற்று எனது முதல் நாடாளுமன்ற உரையை வழங்க வாய்ப்பளித்தமைக்கு என் முதற்கண் நன்றி!

செம்மொழியாம் தமிழ் மொழியாகிய எங்கள் தாய் மொழிக்கு வணக்கம்.

இந்த நேரத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்; சமூக நீதிப் பாதையில் எங்கள் திசைகாட்டி பேரறிஞர் அண்ணா; மற்றும் இந்த இந்திய ஒன்றியத்துக்குள் பல்வேறு தேசிய இனங்களும் தங்களுடைய உரிமைகளை இழந்துவிடாமல் இருப்பதற்கான மாநில சுயாட்சி’ முழக்கத்தை முன்னெடுத்த முன்னோடியாம் தமிழினத் தலைவர் ‘முத்தமிழ் அறிஞர் கலைஞர்’ ஆகியோரை வணங்கி

அவர்களின் வழிநின்று வரலாற்றுச் சிறப்புமிக்க திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தினுடைய இமயம், எட்டுக்கோடி தமிழ் இனத்தின் இனமானத் தலைவராக இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக நெ.1 முதல்வராக தமிழ்நாட்டை வழிநடத்தும் திராவிட நாயகர், உலகத் தமிழர்களின் ஒற்றை நம்பிக்கை ‘திராவிட மாடல்’ முதல்வர், எங்கள் குடும்பத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம் அதிகாரிப்பட்டி (உடையாப்பட்டி) கிராமத்தில் பிறந்த இந்த எளியோனை, யாரென்று தெரியாத என்னை ஊர் நின்று பார்க்க இந்தியத் திருநாட்டின் ஜனநாயகத் திருக்கோவிலான பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தமைக்கு முதற்கண் எனது கோடான கோடி நன்றியை காணிக்கையாக்கி, வாழும் பெரியாரான எங்கள் துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்களுக்கும் நன்றி கூறி எனது உரையைத் துவங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

நான் ஒரு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற படிப்பாளியோ, மிட்டா மிராசோ

அல்லது பெருந்தனக்காரனோ அல்ல. மாறாக தமிழ் மொழியின், தமிழ் இனத்தின் பாதுகாப்பு அரணாக விளங்குகிற திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் மக்கள் இயக்கத்தின் சாதாரண தொண்டன். என் இயக்கத்தின் மீதும், என் தலைமை மீதும் நான் வைத்திருக்கிற மாறாப் பற்றும், விசுவாசமும் தன்னலமற்ற உழைப்பும் மட்டுமே எனக்கான தகுதி. ஆகவே தான், ’உழைப்பு, உழைப்பு, உழைப்பு’ என்று உழைப்பாலே உயர்ந்திருக்கிற என்னுடைய உயிர் மூச்சான தலைவர் என் உழைப்பை மதித்து, என் விசுவாசத்தை மதித்து இந்த மாபெரும் அவைக்கு என்னை அனுப்பி வைத்துள்ளார். அப்படிப்பட்ட உன்னத தலைவருக்கு, தமிழ்நாட்டின் தாயுமானவருக்கு காலமெல்லாம் நன்றி கடன்பட்டவன் இந்த சிவலிங்கம் என்பதை இந்த அவையில் பதிவு செய்கிறேன்.

இந்தியா போன்ற ஒரு கூட்டாட்சி நாட்டில், மத்திய பட்ஜெட் என்பது வெறும் கணக்கு புத்தகம் மட்டுமல்ல; அது சமச்சீர் வளர்ச்சிக்கான அரசின் அரசியல் பார்வையை பிரதிபலிக்கும் ஒரு ஆவணமாகும். அந்த அடிப்படையில்,

தமிழ்நாட்டு மக்களின் கவலைகளையும், அதைவிட விரிவாக நமது கூட்டாட்சி அமைப்பில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் உரிய நிதி நியாயத்திற்கான கோரிக்கையையும் இந்த உரையின் மூலம் பதிவு செய்ய விரும்புகிறேன்.

### ஒன்றிய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை!

ஒன்றிய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் கடந்த பத்தாண்டுகளில், இந்திய குடும்பங்களின் சேமிப்பு விகிதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23.6 சதவிகிதத்தில் இருந்து 15.1 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. ஒரு காலத்தில் நிலையான வைப்புத்தொகை மற்றும் சிறு சேமிப்புத் திட்டங்களை நம்பியிருந்த குடும்பங்கள் இப்போது அவர்களின் அன்றாட செலவுக்கே போதுமானதாக இல்லை வருமானம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. வேலை வாய்ப்புகள் குறைந்து வருவதாலும், வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து வருவதாலும், அடிப்படைச் செலவுகளைச் சமாளிக்கவே மக்கள் கடன் வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.



இந்திய மக்கள் நம்பிக்கையுடன் கொடுத்த வரிகளை, வேலைவாய்ப்பை உருவாக்கவும், பொருளாதாரத்தை வளப்படுத்தவும் பயன்படுத்த வேண்டும். ஆனால், அதற்கு பதிலாக, வேலை இழப்பு, நிதி நெருக்கடி போன்றவைதான் உருவாகியுள்ளன. டிசம்பர் 2024 நிலவரப்படி, இந்தியாவின் வேலை இல்லாதவர்கள் விகிதம் 8.3% ஆக உயர்ந்துள்ளது. இது இளைஞர்களின் எதிர்காலத்துக்கு மிகப்பெரிய இந்திய ஆபத்தாகும்.

கிராமப்புற வேலை வாய்ப்புக்கு உயிர்நாடியான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாதச் சட்டம் பற்றாக்குறையான நிதி ஒதுக்கீட்டின் காரணமாக நெருக்கடியில் உள்ளது. இத்திட்டத்திற்கும் தேவையை விட குறைவாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது பல கிராமப்புற தொழிலாளர்களை நிதி நெருக்கடியில் தள்ளுகிறது. நூறு நாள் வேலைத்திட்ட பணியாளர்களுக்கு ஊதியங்கள் தாமதமாக வழங்கப்படுகிறது.

### மாநிலங்களுக்கு நிதிச்சுமை!

நாடு முழுவதும் 12 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 30% பங்களிக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கூட பெரிதும் கவனிக்கப்படாமல் இருக்கிறது.

ஒன்றிய அரசு எதிர்க்கட்சியால் ஆளப்படும் மாநிலங்களை பொருளாதார ரீதியாக முடக்குவதற்காக அவர்களுக்கு உரிய நிதியைத் தர மறுக்கிறது. தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் வரிவிதிப்பு பங்கீடு, ஜிஎஸ்டி நஷ்ட ஈடு, மத்திய மானிய திட்ட நிதி போன்றவை தாமதமாகவும், குறைவாகவும் பெறுவதால், பெரும் நிதிச் சுமையைத் தாங்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

ஒன்றிய அரசின் நேர்மையற்ற நிதிப் பகிர்வு கொள்கை, நிதி வழங்குவதற்கான கடுமையான நிபந்தனைகள் ஆகியவை மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைப் பறித்து மாநில அரசுகளின் நிர்வாகத்திற்கும், பொருளாதாரத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மாநிலங்களிடையே கூட்டாட்சியை வளர்ப்பதை விட ஏகாதிபத்திய அரசியல் கட்டுப்பாட்டையே ஒன்றிய அரசு முன்னுரிமையாகக் கொண்டிருப்பதை தெளிவாகக் காட்டுகிறது. இது அரசியலமைப்பின் உயிர்நாடியான மாநில உரிமைகளுக்கு முற்றிலும் எதிரானது.

### மாநிலங்கள் தண்டிக்கப்படுகின்றன!

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் ஆட்சியின் மூலம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பெரும் பங்காற்றிவரும் தமிழ்நாடு பல துறைகளில் தொழில் அடித்தளத்தை வளர்த்துக் கொண்டு, கொண்டு, சமூகத் சமூகத் திட்டங்களை திறம்பட செயல்படுத்தி வருகிறது. இருந்தும், ஒவ்வொரு துறையிலும் நிதி ஒதுக்கீடு விவகாரத்தில் ஒன்றிய அரசின் நிலைப்பாடு என்பது எங்கள் வெற்றிக்காகவே நாங்கள் தண்டிக்கப்படுவது போன்ற உணர்வைத் தான் தருகிறது.

ஆம், தற்போதைய கூடுதல் மானியக் கோரிக்கைகள், குறிப்பாக தேசிய வருவாயில் பெரும் பங்காற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் சட்டப்பூர்வமான உரிமைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிராகரிப்பதாகவே உள்ளது.

தமிழ்நாடு என்றென்றும் சமூக நீதி, கூட்டாட்சி உரிமைகள், மற்றும் ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற வகையிலான வளர்ச்சிக்கு முன்மாதிரியாக திகழ்ந்து வருகிறது. ஆனால் தேசிய வருவாயில் அதிக பங்காற்றும் தமிழ்நாட்டுக்கு வழங்கப்படும் மத்திய வரிப்பங்கு தொடர்ந்து குறைக்கப்பட்டு வருகிறது. 15வது நிதி கமிஷன் கீழ் தமிழ்நாட்டுக்கான வரிப் பங்கீடு வெறும் 4.079% ஆகக் குறைந்துள்ளது. இதனால் நிதிச்சுமை அதிகரித்து பேரழிவுகளுக்கு எதிரான நிவாரண நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் கூட பெரிய சவால்களை சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறது.

### கல்வியில் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது!

குறிப்பாக தமிழ்நாடு 82% கல்வியறிவு விகிதத்துடனும், 51.4% உயர்கல்வி சேர்க்கை விகிதத்துடனும் கல்வி வளர்ச்சியில் இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. ஆனால், தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் பா.ஜ.க.வின் தவறான கல்விக் கொள்கையை ஏற்க மறுத்ததற்காக சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய 2000 கோடிக்கும் அதிகமான நிதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது கல்வி உரிமைச் சட்டம் 2009 அமலாக்கத்தையும் கடுமையாக பாதித்துள்ளது. இந்த ஆண்டு கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி 1,28,650 கோடி ரூபாய். இது கடந்த ஆண்டு திருத்தப்பட்ட மதிப்பீட்டைவிட 13% அதிகம் என்றாலும் கல்வியில் சிறந்த தமிழ்நாடு மட்டும் தொடர்ந்து வஞ்சிக்கப்படுகிறது. இதன்மூலம் ஒன்றிய அரசின் அரசியல் நோக்கத்திற்குப் பாதகமாக இருந்தால், ஒரு மாநிலத்தின் கல்வி வளர்ச்சி வளர்ச்சி தண்டிக்கப்படும் என்ற உண்மை தெளிவாகிறது!

எதிர்பாராத செலவுகள், புதிய திட்டங்கள், அல்லது பட்ஜெட்டில் கணிக்கப்படாத பேரிடர் போன்ற செலவினங்கள் ஆகியவை தான் முக்கியமாக ஒரு நிதியாண்டில் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவுகளைச் சமாளிக்க சமர்ப்பிக்கப்படும் கூடுதல் மானியக் கோரிக்கைகள். இந்நிலையில், கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டை நிவர், வர்தா, ஒக்கி, மிச்சாங் போன்ற எண்ணற்ற புயல்கள் தாக்கியதால் ஏற்பட்ட மழை, வெள்ளம் உள்ளிட்டவற்றால் உயிர்சேதம், பொருட்சேதம், பயிர்கள் சேதம் உள்ளிட்ட கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன.

இந்நிலையில், சீரமைப்பு பணிகளுக்கும், மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் தமிழ்நாடு அரசு சார்பில் 24 ஆயிரத்து 679 கோடியே 77 லட்சம் ரூபாய் பேரிடர் கால நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் வெறும் 4 ஆயிரத்து 136 கோடி ரூபாய் நிதியை மட்டுமே வழங்கியுள்ளது ஒன்றிய அரசு. அதாவது வெறும் 17சதவிகிதம் மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது.

அடுத்து பொதுப் போக்குவரத்தில் முக்கியமான அங்கம் வகிக்கும் இரயில்வே பட்ஜெட் ஒதுக்கீட்டிலும் பாரபட்சம். பிற இரயில்வே துறையைக் காட்டிலும் தெற்கு இரயில்வேக்கு மிக குறைந்த அளவிலான நிதி மட்டுமே ஒதுக்கப்படுகிறது. மெட்ரோ ரயில் திட்டங்களை வழங்குவதிலும் தமிழ்நாட்டை ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. சென்னை மாநகரத்தின் வளர்ச்சிமிகு கட்டமைப்பின் மற்றொரு அடையாளம்தான் தலைநகரில் அதிவேக பயணத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கும் மெட்ரோ இரயில் கட்டமைப்பு. அதன் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான நிதி எத்தனையோ முறை வலியுறுத்தியும் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

நாடு முழுவதும் நகரப் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல மாநிலங்கள் மெட்ரோ ரெயில் திட்டங்களை முன்மொழிந்து வரும் நிலையில் தமிழ்நாட்டில், தென்னிந்தியாவின் ‘மான்செஸ்டர்’

என அழைக்கப்படும் தொழில் நகரமான கோவை மற்றும் கோவில் நகரமான மதுரை ஆகிய மாநகரங்களுக்கு மெட்ரோ ரெயில் சேவையை

தொடங்குவதற்காக கோவையில் 39 கிலோமீட்டர் தூரத்திற்கு ரூபாய் 10,740 கோடி செலவிலும், மதுரையில் சுமார் 32 கிலோமீட்டர் தூரத்திற்கு ரூபாய் 11,368 கோடி செலவிலும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து கடந்த 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு அனுப்பியுள்ளது.

ஆனால் ஒன்றிய அரசு தற்போது, மக்கள் தொகையைக் காரணம் கூறி இந்த 2 திட்டங்களையும் நிராகரித்து திட்ட அறிக்கைகளை திருப்பி அனுப்பியுள்ளது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள சிறிய இரண்டாம் நிலை நிலை மாநகரங்களுக்குக் கூட மெட்ரோ இரயிலுக்கான ஒப்புதல் வழங்கிவிட்டு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைப் புறக்கணிப்பது மிகவும் கண்டனத்திற்குரியது.

### தமிழ்நாடு யாசித்து எதையும் கேட்கவில்லை!

இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் முக்கிய பங்களிப்பு செய்கிற முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும், வரிவசூலில் ஒரு பெரிய பங்களிப்பாளராகவும் தமிழ்நாடு திகழ்கிறது; 202425ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மாநில உள்நாட்டு உற்பத்தி சுமார் ரூ.17 லட்சக் கோடியைத் தாண்டி, 11.19% வளர்ச்சியைக் கடந்து, இரட்டை இலக்க வளர்ச்சியை அடைந்த ஒரே மாநிலமாக பதிவாகியுள்ளது. இந்த வளர்ச்சி என்பது சீரற்ற நிகழ்வு அல்ல. கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களில் திராவிட இயக்கமும், அதனுடைய தொடர்ச்சியான திமுக ஆட்சியும் தொடர்ந்து முதலீடு செய்ததன் கூட்டுத் தொடர்ச்சி.

தமிழ்நாடு எவ்விதத்திலும் யாசித்து எதையும் கேட்கவில்லை. நாங்கள் கேட்பது, நாட்டுக்காக அதிகம் பொருள் ஈட்டும் ஒரு மாநிலத்துக்கு இந்திய அரசியலமைப்பு

வழங்கிய உரிமையை மட்டுமே!

### கூட்டாட்சி முறையை ஒற்றை ஆட்சி முறையாக்குவதா?

இப்படிக் கூட்டாட்சிக் கருத்தியலை தொடர்ந்து சிதைக்கும்படி செயல்பட்டு வரும் ஒன்றிய அரசின் போக்கை சுயமரியாதை மிக்க மண்ணான தமிழ்நாடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. ஏனென்றால் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கூறியதுபோல் “கூட்டாட்சி முறையை ஒற்றை ஆட்சி முறையாக்கும் முயற்சிக்கு கிளம்பி உள்ள எதிர்ப்பின் ஈட்டி முனைதான் நாங்கள்!”

இறுதியாக அண்ணல் அம்பேத்கரின் வரிகளை நினைவு கூர்ந்து எனது உரையை நிறைவு செய்கிறேன் “இந்திய அரசியலமைப்பு என்பது கட்டமைப்பில் கூட்டாட்சியும், உணர்வில் ஒற்றுமையானதும் ஆகும்”. அந்த உணர்வு, ஒன்றிய மற்றும் மாநிலங்களுக்கு இடையே ஒன்றுக்கொன்று பொறுப்புடனும்,

வெளிப்படைத்தன்மையுடனும், நேர்மையுடனும் விளங்கிட வேண்டுகிறது. அந்த வகையிலே நிதிக் கூட்டாட்சி என்பது நமது ஜனநாயகத்தின் உயிர்நாடி. அதில் பாகுபாடும், தெளிவின்மையும் ஏற்பட்டால் பிறகு ஜனநாயகம் என்பது உயிர்வாழ முடியாது. இதை ஒன்றிய அரசு கருத்தில் கொண்டு ஏழை, எளிய மக்களின் நலன்களையும் மதித்து, உண்மையான கூட்டாட்சித் தன்மையை வலுப்படுத்தும் வகையில் வெளிப்படையான, விளைவுகளை அளவிடக்கூடிய கூடுதல் ஒதுக்கீட்டு நடைமுறையை ஏற்க வேண்டும்.

GST நிறைவேற்றப் பணம், மத்திய அனுசரணைத் திட்டங்களுக்கான நிலுவைத் தொகைகள், பேரிடர் நிவாரணக் கோரிக்கைகள் ஆகிய அனைத்திற்கும் ஒரு காலக்கெடு நிர்ணயித்து முறையாகத் தீர்த்துவிடும் திட்டத்தை ஒன்றிய அரசு வழங்க வேண்டும்.

இவ்வாறு எஸ்.ஆர். சிவலிங்கம் பேசினார்.

# அரியலூரில் வேலைவாய்ப்பு முகாம்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், டிச. 22 –

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை மாதிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையம், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புர வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை தமிழ் நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் துவக்கி வைத்து, 491 நபர்களுக்கு பணியமர்வு ஆணையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, முன்னிலையில் நடைபெற்றது.

குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை அரசு மாதிரி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, பணிநியமண ஆணைகளை வழங்கினார். இவ்வேலை வாய்ப்பு முகாமில் சுமார் 107க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்களும், தமிழ்நாடு அரசின் திட்டங்களை செயல்படுத்தும் தாட்கோ, மாவட்ட தொழில் மையம் மற்றும் திறன் பயிற்சி நிறுவ னங்கள் கலந்து கொண்டன. இன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் சுமார் 2931 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், தற்போது வரையில் 491 நபர்கள் தனியார் நிறுவ னங்களில் பணிபுரிய தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பணியமர்வு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இதுபோன்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை பயன்படுத்திக்கொண்டு வேலைவாய்ப்பினை பெற்று வாழ்க்கை யில் முன்னேற வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சா ரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து தனியார் துறை பணியமர்வு பெற்ற அருள்ராஜ் என்பவர் தெரிவிக்கையில், எனது சொந்த ஊர் வி.கைகாட்டி. செந்துறையில் தனியார் துறை வேலை வாய்;ப்பு முகாம்கள் நடத்தப்படுவதை விளம்பரங்கள் வாயிலாக அறிந்து கொண்டு இன்றையதினம் வேலை வாய்ப்பு முகாமில் கலந்துகொண்டேன். எனக்கு ஹோட்டல் மேனேஜ் மெண்ட் துறையில் பணி கிடைக்கப் பெற்றுள்ளது. இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நீண்ட நாட்களாக நல்லதொரு வேலைவாய்ப்புக்காக காத்திருந்த சூழலில் எனக்கு பணி வாய்ப்பு கிடை த்துள்ளது. இந்த வேலைவாய்ப்பின் காரணமாக எனது குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு என்னால் முடிந்த பங்களிப்பை அளிக்க முடியும். இந்த வேலைவாய்ப்பு முகாமினை ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி என அருள்ராஜ் என்பவர் தெரிவித்தார். இந்நிகழ்வில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதாதர இயக்கம் திட்ட இயக்குநர் சு.தேன்ராஜ், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்அ. கலைச்செல்வன், ஒன்றிய பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், பொன் .செல்வம், செந்துறை அரசு மாதிரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் எம்.ராமதாஸ், இதர அரசு அலுவலர்கள் மற்றும் இளைஞர்கள், மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





துணை முதலவர் – கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த தினத்தை முன்னிட்டு நெல்லை மேலப்பாளையம் 44வார்டு கழக உடன்பிறப்பு பெரோஸ்கான் ஏற்பாட்டில் ஆட்டோ ஓட்டுனர்கள் மற்றும் கார்ஓட்டுனர்கள் 250 நபர்களுக்கு சீருடையை முன்னாள் அமைச்சர்–கழக மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன்கான் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார்,மாவட்ட இளைஞரணி துணைஅமைப்பாளர் முகம்மது மீரான் மைதீன், ஆதி திராவிட நலக்குழு மாவட்ட அமைப்பாளர் நவநீதன்,நெசவாளர் அணி மாவட்ட துணைஅமைப்பாளர் சாகுல், வட்டக்கழக செயலாளர் இசக்கி,காங்கிரஸ் கட்சி பிரமுகர் ஆசாத் பாதுஷா,முன்னாள் வட்டக்கழக செயலாளர் முறுக்கு சாகுல்,வெங்கடேஷ், தொ.மு.ச.சுந்தரம், ஆதி திராவிட நலக்குழு மாவட்ட துணைஅமைப்பாளர் பேரங்காடி ஐயப்பன், மேலப்பாளையம் அசைனா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டில் நூறுநாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்தும், அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வை கண்டித்தும் வருகிற 24ஆம் தேதி நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பாக மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில், கழக மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.